செய்பவர்களுக்கு 500 ரூபாய் அபராதம் அல்லது ஒரு வருட கடுங்காவல் தண்டனை, மூன்றாவது முறையாகச் செய்பவர்களுக்கு ரூ. 1,000 அபராதம், ஒரு வருஷ கடுங்காவல் தண்டனை என்று பீனல் கோடு சட்டத்தையே மாற்றியிருக்கிறோம். இதைவிட ஓர் அரசு என்ன செய்ய வேண்டும்? மேலும் மக்கள் மத்தியில் மன மாற்றம் ஏற்பட வேண்டுமென்று இந்த அரசு பலவகையான பிரச்சாரங்களைச் செய்துகொண்டுதான் வருகிறது.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, மேல்ஜாதி, கீழ்ஜாதிகளிடையே உள்ள வேற்றுமைகளை ஒழிப்பதற்காக பல்வேறு துறைகளிலே அரசாங்கம் முனைந்து பணியாற்றினாலும் கோயில்களில் அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும். ஒரு கோயிலில் ஐந்து அறங்காவலர்கள் என்று நியமிக்கப்படுகிற இடத்தில், கட்டாயமாக அரிசன வகுப்பைச் சேர்ந்தவர் ஒருவர் அறங்காவலராக இருக்க வேண்டுமென்கிற சட்டம் கொண்டுவரப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, அறங்காவல் துறையிலே என்ன சட்டம் இருக்கிறதென்று எனக்குத் தெரியாது. இப்போது சில அறங்காவலர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆலயங்களிலேகூட தாழ்த்தப்பட்ட மக்களும் அர்ச்சகர்களாக வரவேண்டுமென்று சொல்வதை எதிர்த்து மேல்ஜாதிக்காரர்கள் வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். இந்த நூற்றாண்டிலேகூட பெருந்தலைவர்கள் மத்தியிலே இப்படிப்பட்ட எண்ணம் இருந்து வருவது கண்டு வேதனையடைய வேண்டியிருக்கிறது. வருத்தப்பட வேண்டியிருக்கிறது.

கொல்லி மலை ஆதிவாசிகளுக்கு நிலப் பட்டா

*413 வினா—திரு. சி. சின்னவெள்ளையன்: மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலையில் உள்ள ஆதிவாசிகளுக்கு நிலப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1972 மார்ச் 10]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) & (இ): 1-1-1971 தேதி முதல் 31-1-1972 தேதி முடிய 2285.05 ஏக்கர் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. 1,135 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. சி. சின்னவெள்ளையன் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையிலே வசிக்கின்ற மலைவாசிகளுக்கு நிலப் பட்டா வழங்குவதில் காலதாமதம் செய்யாமல் உடனடியாக வழங்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பட்டா வழங்கப்பட்டிருப்பதைதான் இப்பொழுது நான் சொன்னேன். இன்னும் 463 ஏக்கர், 95 சென்ட் உள்ள இடம் இருக்கிறது. அதையும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தாமுள்ள காகிதம் உற்பத்தி

* 414 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தின் தொழிற்சாலையில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்ற பேப்பர்கள் போன்று தாமுள்ள காகிதங்கள் தயாரிக்கும் திட்டம் ஏதேனும் தற்சமயம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

Pelletisation plant at Salem

* 415 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the pelletisation plant at Salem launched some time past is working; and

(*b*) if so, the details of production so far achieved by this plant?